

# அறிவொளிப் பாடல்

## சிறுவர் பாடல்கள்

උපදේශාත්මක ගී/ KNOW LEDGABLE SONGS

ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K.THENUSHA
72. 2nd LANE
ANANDAPURI
TRINCO

# அறிவொளிப் பாடல்

[Knowledgeable Song]

சிறுவர் பாடல்கள்


ச,அருளானந்தம்,

B.A.M.Lit.D.A. PhD. SLEAS



சுசரா

சுசரா வெளியீட்டகம்

இல.180/43 பீபல்ஸ்பார்க்

கொழும்பு-11

இலங்கை .

தொ.பே.011 2430721/தொ.ந. 011 2334597



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறிவொளிப் பாடல்**
© வ/ப சுசர வெளியீட்டகம்
முதலாம் பதிப்பு 2011
தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

**அறிவொளிப் பாடல்**
ச.அருளானந்தம்
வ/ப சுசர வெளியீட்டகம
ப.32 மி.மீ 210 x மி.மீ 148
ISBN 978 - 955 - 676 - 141 - 2 விலை ரூ

**கல்வி ஆலோசனை மற்றும் மேற்பார்வை**

சரத் சந்திர ஜயவர்தன
B. A. (இலங்கை) MSc களனி

**கணணி தட்டச்சு**

பிரசாத் அமரசிங்ஹ

**பதிப்பு வெளியீடு விநியோகம்**

சுசர வெளியீட்டகம்
இல 180.'.43 பீபல்ஸ்பார்க் கொழும்பு-11
சுசர தொ.பே - 0112 430721 தொ.ந - 0112 334597

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நூலின் பெயர் | : அறிவொளிப் பாடல் |
| ஆசிரியர் | : ச. அருளானந்தம் (கேணிப்பித்தன்) |
| வகை | : சிறுவர் பாடல்கள் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற்பதிப்பு | : 2011 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது உரை

சிறுவர்களுக்குரிய அறிவொளிப் பாடல்கள் சிறுவர் இலக்கியப் பரப்பில் மிகக்குறைவு எனப்பல அறிஞர்களும் ஆதங்கப்படுவர். சிறுவர்கள் சிந்தனைத் திறன் படைத்தவர்கள். எதனையும் துருவி ஆராயும் ஆற்றல் கொண்டவர்கள். சிறுவர்களது உள்ளங்கள் நாற்றுமேடை போன்றன. அவர்களது உள்ளங்களில் சிந்திக்கத் தக்க எண்ணக் கருக்களை விதைக்க வேண்டும். அவ்விதைகள் நல்லனவாகவும், வல்லனவாகவும் இருத்தல் அவசியம் பிள்ளைகளுக்கு அறக்கருத்துக்களோடு நவீன விஞ்ஞான, தொழில்நுட்பக் கருத்துக்களையும் போதிக்க வேண்டும் என்று கூறிவருகின்றனர்.

சிறுவர்கள் யார்? என்ற வரையறையினுள் நின்று கொண்டு கருவறை தொடக்கம் பதினெட்டு வயதுவரையுள்ள ஆண் பெண் இருபாலாரையும் கவனத்தில் கொண்டு இப்பாடல்களை எழுதியுள்ளேன். சிறுவர் இலக்கியம் சிறுவரின் உளநிலை, ஒழுக்கநிலை, ஆளுமை என்பவற்றை வளர்த்தெடுக்கும் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் அவர்களது வயதும் கவனிக்கப்படவேண்டும்.

பிள்ளைகள் அறிவின் சுரங்கம். அவர்கள் தீக்குச்சி போன்றவர்கள். தீக்குச்சியை உரசினால் பற்றும். அதனை உரசவேண்டிய நேரத்தில், உரிய இடத்தில் உரசவேண்டும். அறிவியல் பாடல்கள் தேவை என்கிறார்கள். அவற்றைச் சிறார்கள் தேடிப்படிக்கச் செய்தால் அவர்களது சிந்தனை துளிர்விட்டுப் பிரகாசிக்கும். இன்று நமது சிறார்களுக்கு அறிவியலை ஆன்மீகத்தோடு குழைத்துக் கொடுக்க வேண்டும். அது அவசியமானதுமாகும்.

அறக்கருத்துக்கள் கொண்ட சிறுவர் இலக்கியங்கள் நமது சிறுவர்களுக்கு அவசியம் தேவை என்பதை இன்றைய சமூகம் போகின்ற போக்கை உணர்ந்தால் புரியும். 'வையத்துள் வாழ்வாங்கு வாழும்' கலையை நம் இளைய சமுதாயத்துக்கு வழங்க வேண்டியது அசியமாகிறது. பல்வேறு தலைப்புக்களில் சிறுவர்களுக்கு அறிவைப் புகட்ட வேண்டும். அவ்வகையில் நானும் என்னால் முடிந்தவரை சிறுவர்களுக்காக எழுதுகிறேன். அவர்களுக்கு இவ்வகை நூல்களை அறிமுகம் செய்து படிக்கத் தூண்ட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் செயற்பாட்டினை பெற்றோரும், ஆசிரியர்களும் முன்னெடுக்க வேண்டும். நாங்கள் பிள்ளைகளுக்குச் சிறந்த வழிகாட்டல்களைச் செய்யத் தவறினால் அதன் எதிர் மாறான பிரதிபலிப்புக்களைத்தான் காணமுடியும். நல்ல சமூகத்தை உருவாக்க சிந்திக்கவைக்கும் ஆற்றலை மாணவர்களிடம் ஏற்படுத்த வேண்டும்.

நாம் காணுகின்ற பொருட்களைச் சற்று வித்தியாசமாகப் பார்த்து, வித்தியாசமாகச் சொல்லலாம் அல்லவா? தேடலில் நாட்டம் கொள்ள வேண்டும்.

மொழியாற்றல் உள்ளவர்களால்தான் முன்னேற முடியும். கற்பனை வளமும், அறிவும் கருவிலேயே உருவாகிவிடுகிறது. அதனை வளர்த்தெடுப்பது சூழலில் தங்கியுள்ளது. வீடும், பாடசாலையும் சமூகமும் நல்ல வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். விடாமுயற்சியை இளமையிலேயே தொடக்கிவிட வேண்டும். 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்பது முது மொழி. இதனைக் கருத்தில் கொண்டு சிறார்களை வழிநடத்துவது நமது கடமை எனக்கொண்டு செயற்படவேண்டும்.

பல்வகையான சிறுவர் பாடல்களைக் கலந்து இந்நூலில் புகுத்தியுள்ளேன். சிறுவருக்கு இவற்றை அறிமுகம் செய்து சிந்திக்க வையுங்கள்.

நன்றி

கேணிப்பித்தன் ச.அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலின் உள்ளே.


1. இயற்கையின் சிலிர்ப்பு
2. சிட்டுக் குருவிபோல
3. புதுமைகள் பார்
4. ஊஞ்சல் ஆடுவோம்
5. பிரபஞ்சம்
6. எது வீரம்
7. வெள்ளம் பரவுது
8. உயிர் காப்போம்
9. பயிர் செய்வோம்
10. சேர்ந்து வாழ்வோம்
11. கல்வி கற்றிடு
12. துணிவோம்
13. மூச்சு விடும் மூக்கு
14. ஆடும் பொம்மை
15. தொன்மா
16. நமது பூவுலகம்
17. கருக்கட்டல்
18. வளங்கள்
19. மனிதன் யார்?
20. காற்று வீசும்
21. பருவக் காற்று.
22. வளியின் வலிமை
23. செயல்
24. சீனி வந்தது.
25. காகத்தில் ஒரு கதை
26. எழுந்து வா.
27. வானம் எனும் புத்தகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. இயற்கையின் சிலிர்ப்பு



பச்சை இலை பளிங்கு வானம்
பார்த்து இருக்கும் பூக்களும்
உச்சிக் கிளை தாவும் குரங்கு
ஓடி வரும் மான்களும்

படமெடுத்து ஆடும் பாம்பு
பல்லி ஓணான் பறவையும்
கடவுள் தந்த செல்வமாகும்
கனிந்து வாழ்த்துப் பாடுவோம்

வானில் நிலா வெள்ளி பூக்கும்
வாடைக் காற்று வீசிடும்
தேனளைந்த தென்றல் ஆடும்
சிந்து வண்டு பாடிடும்

கோயில் மணி ஓசையிலே
கோலம் இறைவன் தோற்றிடும்
வாயில் தேடி இறைவருவான்
வணங்கிச் சேவை செய்குவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 2. சிட்டுக் குருவிபோல்

கூடு கட்டக் குருவிக்குயார்
சொல்லிக் கொடுத்தது?
கூடி வானில் பறக்கயாரோ
கற்றுக் கொடுத்தது?

சோடி சேர்ந்து வாழயாரோ
சொல்லித் தந்தது?
தேடி உணவை உண்ணயாரோ
காட்டிக் கொடுத்தது?

கிழக்கு வெழுக்கும் முன்னேகுருவி
களித்துப் பாடுது
விளக்கு வைக்கும் முன்னேகூடு
விரைந்து செல்லுது.

முட்டை இட்டுக் குஞ்சுபொரித்து
மகிழ்ந்து வாழுது.
சிட்டுக் குருவி போலநாமும்
சேர்ந்து வாழுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 3. புதுமைகள் பார்

ஒற்றைக் காலில் கொக்குத் தம்பி
உற்றுப் பார்க்கிறார்
முற்றம் நிறைந்து காகக் குஞ்சார்
முறைத்துப் பார்க்கிறார்

இரண்டு காலில் மனிதன் மட்டும்
எழுந்து நடக்கிறான்
வெருண்டு காட்டில் சில மிருகம்
வியக்க நடக்குமாம்

நாலு காலில் ஆட்டுக் குட்டி
நடந்து திரிகிறார்
பாலும் குடித்துக் கன்றுக் குட்டி
பாய்ந்து துள்ளுறார்.

எட்டுக் காலில் நண்டுத் தம்பி
எப்படி நடக்கிறார்?
எட்டி இடம் வலமும் பார்த்து
இனிதாய் ஓடுறார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. ஊஞ்சல் ஆடுவோம்

உயர்ந்த மரத்துக் கிளையிலே
ஊஞ்சல் கட்டி ஆடுவோம்
நயம் நிறைந்த பாடலை
நாளும் போற்றிப் பாடுவோம்

அண்ணன் ஊஞ்சல் பலகையில்
ஆட நுனியில் நிற்கிறான்
கண்ணன் பலகை நுனியிலே
கயிற்றைப் பிடித்து நிற்கிறான்

தம்பி தங்கை ஊஞ்சலில்
தாளம் போட்டுப் பாடுறார்
உந்தி உந்தி அண்ணன்மார்
ஊஞ்சல் ஆட வைக்கிறார்


சிறுவர் நாங்கள் செய்வதைச்
சுற்றம் சூழ்ந்து பார்க்கிறார்
பெருமை கொண்டு பெரியவர்
பார்த்துக் களித்து நிற்கிறார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. பிரபஞ்சம்



வானப் பரப்பினில் தூசுதுணிக்கைகள்
வந்து சுழன்று பிணைந்தன.
வானம் அளந்து விரைந்து பரவியோர்
வாயுக் கோளமாய் ஆனது

கனன்று சுழன்றது கடுவிசை கொண்டது
கரையெலாம் இறுகிப் போனது
கனன்று கனன்றொரு கனிவுகொண்டது
கடிதாய் வெடித்துப் பறந்தது.

துண்டு துணிக்கைகள் தூசுப் புகையுடன்
சுழன்று கலைந்து பரந்தது
அண்டம் எங்கிலும் ஆயிரம் பால்வெளி
அன்றே உருவாகிக் கொண்டது.

சுழன்று சுழன்றொரு கோடியாண்டுகள்
சுற்றி இறுகி யலைந்தது
பழங் கனிவது போலொரு நாள்வரை
புவனம் வான்வீதி வந்தது

எத்தனை ஆயிரம் பால்வெளி யுண்டிந்த
எழில்மிகு வான வீதியில்
அத்தனையும் கண்டிங்கு ஆவனசெய்யணும்
அதிலெங்கும் குடியேறப் பார்க்கணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 6. எது வீரம்?

சரித்திரம் படித்தென்ன லாபம் - எல்லாம்
தரித்திரம் படைத்திடும் பாடம்
ஒருவரை கொல்லுதல் வீரமா? - புத்தர்
அறவழி நிற்பது வீரமா?

காற்றில் மறைந்துள்ள சக்தியை - நாம்
கண்டு பயன் கொள்ளுதல் வீரமாம்
சேற்றைக் கலக்கிப் பயிரிட்டு - அதில்
செல்வம் விளைப்பது வீரமாம்

காட்டாற்றை அணையிட்டுத் தடுத்து - அதில்
குளமதை அமைப்பது வீரமாம்
நாட்டில் விளைச்சலைக் கூட்டி - மக்கள்
நன்மைகள் பெறச்செய்தல் வீரமாம்

தண்ணீரில் மறைந்துள்ள மின்னினை - கண்டு
கனரக தொழில் செய்தல் வீரமாம்
கண்ணென உயிர்களைக் காத்தலே - எம்
கடமையென் றெண்ணுதல் வீரமாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 7. வெள்ளம் பரவுது

வீட்டுச் சுவரதை வீழ்த்திய தண்ணீர்
வீறுடன் பாயுதாம் பரவி
காட்டு வெள்ளம் கழனிகள் பரவுதாம்
காப்பது எப்படித் தங்காய்?

ஓலைக் குடிசைகள் ஒழுகி நிறையுதாம்
ஓரிடம் இல்லையாம் ஓடி
சாலைகள் தோறும் சாரியாய் மக்கள்
சாயுறார் புகலிடம் தேடி

ஆடு மாடுகள் அத்தனை உடைமையும்
ஆற்றிலே போகுதாம் பாரு
நாடு புகுந்தநீர் நம்மவர் ஊர்களை
நகர்த்தித் தள்ளுதாம் கேளு

யாரிடம் சொல்வது யார்வந்து காப்பது
யாவரும் அகதியாய் ஆனார்
தேர்தலின் போது வாக்கினைக் கேட்டு
தெருவோரம் நிற்பார் பாரு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. உயிர் காப்போம்

வருமுன் காக்கும் திட்டம் இருந்தால்
வாசலில் நிற்குமா துன்பம்
தெருவில் திரியும் அவலம் வருமா
தெளிந்திட வேண்டும் தங்காய்.

இயற்கை அனர்த்தம் இருமுறை வருமென
இயற்கையே நமக்கு உணர்த்தும்
செயற்கை அனர்த்தம் மனித விலங்கின்
செயலால் வருமெனத் தெரிவாய்.

வரட்சியும் வெள்ளமும் வருமெனத் தெரிந்தும்
வருமுன் காத்திட முயலார்
தெரிந்து செயற்படு தெளிவு நிறைந்தவர்
சிந்தையில் கொள்ளவும் மாட்டார்.

வருமுன் காக்கும் திட்டம் தீட்டுவோம்
வளங்களைத் தேடிக் கொள்வோம்
விரைந்து செயற்பட புறப்பட்டுவாடி
விடியலை நோக்கிப் போவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. பயிர் செய்வோம்.

வயல்நிலம் பரந்துமே கிடக்கு - அதில்
வளங்களும் புதைந்துமே இருக்கு
செயல்திறன் நம்மிடம் உண்டு - நம்
சிந்தையில் கொள்வதே இல்லை

தொழில் வளம் பெருக்கிட வேண்டும் - தொழில்
செய்வதில் முழுமனம் வேண்டும்
தொழிலதை மதித்திட வேண்டும் - நாட்டில்
சந்தையும் பெருகிட வேண்டும்

விளைபொருள் பெருக்கிட வேண்டும் - அதை
வெளிநாட்டுக்கு அனுப்பிட வேண்டும்
இளைஞர்கள் சக்தியைத் திரட்டி - ஒன்றாய்
இருகரம் பற்றியே வாழ்வோம்.

பலகலை பயின்றிட வேண்டும் - நாம்
பண்பினில் உயர்ந்திட வேண்டும்
உலகிலே இலங்கையை நிறுத்தி - பெரும்
உயர்வினை பெறவழி செய்வோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. சேர்ந்து வாழ்வோம்

ஆழிசூழ் இலங்கை எம்தீவு - இங்கு
அனைவரும் ஒன்றெனக் கூறு
மேழிபிடித் திடும் தொழிலே - நமக்கு
மேன்மை தரும் என்றேபாடு.

சாய்ந்து நிமிர்ந்திடும் மலைகள் - எங்கும்
சொரிந்திடும் பணப்பயிர் வளர்ப்போம்
பாயும் நதிக்கரை யோரம் - விளை
பயிரிட்டே விளைச்சலை பெறுவோம்

பகிர்ந்துண்டு வாழ்தலே மகிமை - நாம்
பாரினில் பெறுவது பெருமை
நகமும் சதையது போன்று - தினம்
நாமிங்கு வாழ்வதே சான்று

சீருற சேர்ந்திங்கு வாழ்வோம் - ஒன்றாய்
தினந்தினம் தென்றலாய் சேர்வோம்
போரும் பகையதும் வேண்டாம் - இந்தப்
பொன்னான வாழ்க்கையே போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 11. கல்வி கற்றிடு

நீல வானம் விரிந்து கிடக்குது
நீந்தி மேகம் கோலவம் காட்டுது
கோலச் சிறகைப் பறவை விரிக்குது
கூடி மகிழ்ந்து பறந்து காட்டுது.

மரஞ் செடிகள் வளரத் துடிக்குது
மலரும் காயும் விளைந்து சொரியுது
பரந்து விலங்கு பாய்ந்து திரியுது
பாரில் உயிர்கள் மகிழ்ந்து வாழுது.

பறவை போல பறக்க ஆசையா?
பாடி நீரில் நீந்த ஆசையா?
சிறகு செய்து பொருத்திப் பார்த்திடு
சிகரம் வரை சென்று பார்த்திடு

நினைப்பதை நீ செய்து முடிக்கலாம்
நிறைந்த உழைப்பால் உயர்ந்து காட்டலாம்
அனைத்தும் உன்னால் ஆக வேண்டுமே
அதற்கு முயன்று கல்வி கற்றிடு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. துணிவோம்

அந்நியர் அறிவுரை கேட்போம் - அவர்
ஆதிக்கம் செலுத்தவிடமாட்டோம்
சிந்தனைத் திறத்தினை வளர்ப்போம் - நம்
தேசத்தைக் கட்டியே காப்போம்

கடல்சூழ் இலங்கைத் திருநாடு - எங்கும்
கழனிகள் நிறைந்திடு பொன்நாடு
கடன்களில் மூழ்குதல் முறையோ - பிறரின்
கைகளில் சிக்குதல் முறையோ?

பிரிவினை மூட்டியே வைப்பார் - நம்மைப்
பிரித்துமே வைத்திடப் பார்ப்பார்
புரிந்துமே சேர்ந்தொன்றாய் வாழ்வோம் - இங்கு
புதுமைகள் விளைந்திடும் காண்போம்.

மாநதி விளைநிலம் உண்டு - உழைக்கும்
மக்களும் மனங்களும் உண்டு
போனவை போகட்டும் மறப்போம் - சேர்ந்து
புதுயுகம் இலங்கையில் காண்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 13. மூச்சுவிடும் மூக்கு

முகத்துக்கு மூக்கு அழகூட்டும் - அது
மூச்சை எடுத்து உயிரூட்டும்
சுகத்தை வளிதான் கொடுக்கிறது - உடல்
சுவாசம் பெற்றுப் பிழைக்கிறது

விலங்குகள் சுவாசிக்க வழியுண்டு - அதை
விளக்க நல்ல மூக்குண்டு
நிலைத்திடும் தாவரம் சுவாசிக்க - இலை
நிலத்தடி வேர்களும் உதவிடுமாம்

உயிரினம் அனைத்தும் சுவாசிக்கும் - வளியில்
உள்ள ஒக்சிசன் உதவிடுமாம்
பயிரினம் பகலில் உருவாக்கும் - ஒக்சிசன்
பாரினைத் தளைத்திடச் செய்திடுதாம்

இரவினில் தாவரம் வெளிவிடுமாம் - காபநீர்
ஒக்சயிட் வந்து பரவிடுமாம்
இரவினில் மரங்களின் கீழ்படுத்தால் - நெஞ்சு
இறுகி மூச்சுத் திணறிடுமாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. ஆடும் பொம்மை

ஆடும் பொம்மை பாருங்கள்
ஆடி ஆடிக் காட்டுது
பாடும் கேட்டுப் பாருங்கள்
பாடி வாங்கிக் கொள்ளுங்கள்

ஆட்டம் ஆடிக் காட்டிடும்
அசைந்து அசைந்து நெளிந்திடும்
நோட்டம் விடும் கண்களால்
நோக்கி நம்மைப் பார்த்திடும்.

கண்ணை உருட்டிக் காட்டிடும்
கைகால் தட்டிக் காட்டிடும்
மண்ணைக் கையால் கிள்ளிடும்
வட்டம் அடித்தும காட்டிடும்.

சட்டை போட்டு நடிக்குது
சடையும் பின்னிக் கிடக்குது
குட்டிக் கரணம் அடிக்குது
கூடி வந்து பாருங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. தொன்மா டைனோசர்.


பழமை மிக்க காலத்தில்
பூமியில் வாழ்ந்த விலங்குகளில்
சிலவகை உயிரினம் இன்றில்லை
சிதைவுகள் மட்டும் உள்ளனவாம்

தொன்மா என்பது தமிழ்ச்சொல்லே
தொலைந்த உயிரினம் டைனோசர்
பென்னம் பெரிய உருவங்களாய்
புவியில் வாழ்ந்து அழிந்தனவாம்

ஆதியில் இருந்தது ஒருகண்டம்
அதற்குப் பஞ்சியா பெயரென்றார்
பீதிகொள் பயங்கர நிலம்பிளந்து
பாறைக் குழம்பு பரந்ததுவாம்.

விண்ணில் ஆயிரம் விண்கற்கள்
விரைந்து சுழன்று உலாவருதாம்
தன்வழி விட்டு கழன்றொருநாள்
தரைவழி புகுந்து விழுந்ததுவாம்.

சடுதி காலநிலை மாற்றம்
தகிக்கும் வெப்பம் தாக்கியதால்
திடுதிடு திடுவென உயிரினங்கள்
செத்து வீழ்ந்து புதைந்தனவாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 16. நமது பூவுலகம்

பூமி தோன்றிய நாள்முதலாய் - அதன்
புறமும் உள்ளும் மாறிவரும்
பூமி சுழன்று வருவதனால் - உரிய
பருவ காலம் மாறிவரும்

மேற்படை இறுகி ஓடாக - உள்ளே
வேகும் பாறைக் குழம்புளது.
மேற்புறம் நீர்நிலம் கொண்டதுவாய் - அதன்
மேலே வளியுறை சூழ்ந்துளது.

பஞ்சியா என்றொரு நிலத்திணிவும் - கடலும்
பரந்து ஒருபுறம் இருந்ததுவாம்
அஞ்சிட பூமி வெடித்தொருநாள் - பிளந்து
அகன்று நிலத்தைப் பரப்பியதாம்.

தொடர்ந்து நிலங்கள் நகருதடா
தொல்லை தந்து நடுக்குதடா
படரும் துயரம் தொடர்கதையாய்
பாரே பதறவைத் தாட்டுதடா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. கருக்கட்டல்

சிறிய விதையை நட்டுவிட்டால்
சிலநாட் கழிந்து முளைகொள்ளும்
பெரிய மரமாய் ஆகிப்பின்
பூத்துக் காய்த்து கனிதருமாம்.

பூவில் எப்படிக் காய்கள்வரும்
புதினம் இருக்கு யோசிப்போம்.
பூவினம் பற்பல நிறங்களிலே
பூத்து நிற்பதேன் புரிகிறதா?

மகரந்த மணிகள் பூவிலுண்டு
மதுரசத் தேனும் மலரிலுண்டு
மகரந்த மணிகளை வண்டுகளும்
வளியும் காவிச் செல்கிறதாம்

பூவிலும் ஆண்பெண் வகையுண்டு
புல்லிகள் உள்ளே சூலிருக்கும்
கூவிடும் வண்டின் உடல்மேலே
கூடிடும் மகரந்தம் நிறைந்திருக்கும்

காவிச் செல்லும் மகரந்தம்
காவின் வேறு பூக்களிலே
தாவிக் கருக்கட்டல் நிகழ்கிறதாம்
கற்பனை யல்ல உண்மையிது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 18. வளங்கள்

நமது பூமியில் என்னஇல்லை
நமக்கு வேண்டிய அனைத்தையுமே
நமக்காய் இறைவன் வைத்துள்ளான்
நாம்தான் அதனைப் புரியவில்லை

தட்டிப் பார்த்தால் தங்கம்வரும்
தகரம் செம்பு கனியவளம்
எட்டி இடித்தால் இரும்புவரும்
ஈர்க்கும் காந்தம் துருவங்களில்

ஓடும் பொறியை இயக்கவல்ல
ஒருபொருள் நிலநெய் ஒளிந்துள்ளது
பாடும் காற்றின் வலிமையினைப்
பாய்மரக் கப்பலில் பார்த்திடலாம்

அலைகடல் மடியின் அடியினிலே
ஆயிரம் கோடி உயிரினங்கள்
விலைமதிப் பில்லா ரத்தினங்கள்
விளைந்து கிடக்கும் விளைநிலமாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 19. மனிதன் யார்?

உலகில் வாழும் உயிரினங்கள் - அதை
உற்று நோக்கிப் பாரத்தாலே
பலவகை உள்ளதை உணர்ந்திடுவாய் - நீ
புரிந்தால் அறிவு பெருகுமடா.

நிலையாய் நிற்கும் வேரூன்றி - சில
நிலவும் நீர்மேல் தாவரமாம்
அலைந்து திரியும் உணவுக்காய் - அவை
அனைத்தும் உலகின் உயிரிகளாம்

அலைந்து திரிந்த உயிரினத்துள் - ஒன்று
ஆறறி வுள்ள விலங்கினமாம்
புல்னை வெல்லும் ஆற்றலுள்ள - அந்தப்
புனிதர் எல்லாம் மானிடமாம்

சிரித்துப் பேசிக் கதையளந்து - தன்
சிந்தனைத் திறத்தை வளர்த்தெடுத்து
விரித்து அறிவைப் பெருக்கிநிதம் - உலகில்
வாழும் மனித விலங்கினமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. காற்று வீசும்

சூரியன் உதயம் கொள்கிறது
சுழன்று பூமி வலம்வருது
சூரிய கதிர்கள் பரவிவர
சூடு உலகம் கொள்கிறது

வளியை மெல்லச் சூடாக்கும்
விரிந்து விரைந்து மெலிதாகும்
வளியும் விரிந்து கொள்வதனால்
வளியின் சமநிலை குலைவடையும்.

வளியின் சமநிலை குலைவதனால்
வெற்றிடம் ஒன்று உருவாகும்
வளிதான் விரைந்து மூசிவரும்
வெற்றிடம் நிரப்பி சமனாக்கும்

வெற்றிடம் நிரப்ப விரைந்துவரும்
வளியின் செயலே காற்றாகும்
வெற்றி நன்றாய் சிந்தித்தால்
வாழ்வில் வந்து குடிகொள்ளும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. பருவக்காற்று

கோடையில் வெயிலும் சுட்டெரிக்கும்
கோல மாரியில் மழைகொட்டும்
கோடை வெயிலை சமன்செய்ய
கொண்டல் காற்றுத் துணையாகும்

மாரியில் மழைதான் நிலம்குளிரும்
வயிறு வளர்க்கப் பயிர்விளையும்
மாரியில் மழைநீர் குளம்சேரும்
வழிந்து வெள்ளம் தான்கொள்ளும்.

வடகீழ் பருவக் காற்றொன்று
வந்து வீசும் மாரியில்தான்
அடுத்து தென்மேல் காற்றாகும்
அதுவும் ஒருபுறம் மழைகொடுக்கும்.

இலங்கைத் தீவைப் பார்த்தாயா
இருக்கும் நிலையம் புரிந்தாயா?
உலகப் படத்தைப் பார்த்துக்கொள்
உண்மை நிலையினைப் புரிந்துகொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. வளியின் வலிமை

குடத்தை மார்பில் அணைத்தபடி
குப்புற கவிழ்த்துப் பிடித்தபடி
குடத்தொடு குளத்தில் பாய்ந்தவுடன்
குடமே ஓடமாய் மிதக்குமப்பா

குளத்தின் நீரைக் குடத்தினுள்ளே
கொள்ள அமுக்கும் வேகத்தில்
குளத்து நீரும் குடத்தினுள்ளே
குபுகுபு குபுவென புகுந்துகொள்ளும்.

தண்ணீர் போகும் வேகத்தில்
திரும்பும் வளியின் செயலதனால்
தண்ணீர் இரைந்து கொள்கிறதாம்
சத்தம் வந்தது தெரிந்துகொண்டேன்

வெற்றுக் குடத்துள் வளியிருந்து
வெளியே வரவழி இல்லையெனில்
வெற்றுக் குடத்துள் வளியிருந்து
விடாது நீரைத் தடுத்ததப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. வெப்பத்தின் செயல்

வெப்பம் ஏறப் பொருள்யாவும்
விரிந்து அளவில் பெரிதாகும்
வெப்பம் பெற்ற நீர்நிலைகள்
வெளியில் ஆவி தனைவிடுமாம்

நீரில் வெப்பம் ஏற்றிவிட்டால்
நீரா விசக்தி வெளியாகும்
பாரில் உள்ளோர் பயன்பெறுவார்
பலவித நன்மைகள் உருவாகும்

இடியப்பம் பிட்டு இட்லியும்
இனிக்கும் மோதகம் கொளுக்கட்டை
பிடிக்கும் தீன்வகை அவித்துவிடும்
பெருமை நீராவிக் குண்டேதான்.

அழுக்குத் துணியைச் சீராக்கி
அகற்றும் வெள்ளாவித் தொழிலாகும்
இழுத்து இரும்புத் தண்டவாளத்தில்
இரைந்து புகைவண்டி ஓடவைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24. சீனி வந்தது

சீனியைக் கொஞ்சம் சரையிலெடு
சிறிதாய் மணலை அள்ளி யெடு
பேணியில் நீரை அளவாய் எடு
போட்டுக் கரைத்து மேசையில்லை

சீனியை நாவில் போட்டுப் பார்
சிறிதாய் மணலை ருசித்துப் பார்
சீனியில் இனிப்பு மணலில் இல்லை
சிந்தனை செய்து புரிந்து கொள்ளு

சீனியை நீருள் போட்டு வைத்தொரு
சின்னக் கரண்டியால் கலக்கிப் பார்
சீனியைத் தண்ணீர் கரைத்திடும் பார்
சீனித் தண்ணீர் சேர்ந்து இனித்திடும்

கரைசலைக் கலத்தில் ஊற்றி எடுத்துமே
கலத்தை அடுப்பின் மேலே வைப்பாய்
விரைந்து கொதித்து ஆவியெழுந்திடும்
விறைத்துப் போகோதே சீனியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 25. காகத்தில் ஒரு கதை

தோட்ட மரஞ் செடிகளில்
தேடி இரை பார்த்தது
வீட்டுத் திண்ணை முற்றத்தில்
வந்து காகம் இருந்தது.

காகம் உற்றுப் பார்ப்பதைக்
காட்டி அப்பா வினவினார்
காகம் பார்க்கும் பார்வையில்
கதை இருப்பதைக் கூறினார்.

சீதை குளிக்கும் போதிலே
சயந்தன் பார்க்க எண்ணினான்
பேதை காகம் போலவே
போயிருந்து பார்த்தனன்.

அறுகம் புல்லால் இராமனும்
அம்பு செய்து விட்டனன்.
ஒருகண் பார்வை மட்டுமே
உண்டு என்று விளக்கினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26. எழுந்து வா

நெஞ்சில் உரம் கொண்டு வாடா
நிமிர்ந்த நடை பயின்று வாடா
அஞ்சி அஞ்சி வாழ்தல் போதும்
அச்சம் இன்றி எழுந்து வாடா

ஒளி படைத்த கண்கள் காட்டு
உண்மை தேங்கும் உள்ளம் காட்டு
களி படைத்த வாழ்க்கையொன்று
காத்திருக்கு எழுந்து வாடா

சாதி பேதம் உடைந்து போச்சு
சமயச் சண்டை ஓய்ந்து போச்சு
ஓதி உண்மை காணலாச்சு
ஒன்று பட்டு வாழவாடா

அன்பு ஒன்றே உலகையாளும்
அகிம்சை வழி இன்பம்சேரும்
என்று சொல்லி வாழ்வோம் வாடா
இந்த உலகைக் காப்போம்வாடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்நூலாசிரியர் ...

கலாபூஷணம் கேணிப்பித்தன் ச.அருளானந்தம் அவர்கள் நாடறிந்த எழுத்தாளர். சிறுவர்களுக்காகப் பல நூல்களை எழுதி பல சாகித்திய விருதுகளைப் பெற்றவர். ஆசிரியர், அதிபர் கல்விப்பணிப்பாளர் எனச் சேவையாற்றியவர். கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, பத்தியெழுத்து, நாடகம் எனப் பலதுறைகளிலும் ஈடுபாடுடையவர். முறைசாராக் கல்வியிலும் முன்பள்ளிக் கல்வியிலும் ஆர்வம் கொண்டவர். விளையாட்டல்லாத விளையாட்டு என்ற நூலைப் பலவல்லுநர்களுடன் சேர்ந்து ஆங்கிலத்தில் எழுதி, அதனைத் தமிழில் அழகாக மொழிமாற்றம் செய்தவர். அந்நூல் முன்பள்ளிகளில் சிறந்த பாடத்திட்டமாக உள்ளது.

அற்புதமான வானம் என்ற சிறுவர் சிந்தனைக் கதைகள் அற்புதமான பல்வேறுபட்ட கதைகளைக் கொண்டது. அந்நூலுக்கு இலங்கைச் சாஹித்திய விருதும் 55000 ரூபாய் பரிசும் கிடைத்தது. வாக்கினிலே இனிமை வேண்டும். என்ற நாவலையும், கண்ணனும் இராமனும் என்னும் சிறுவர் கதையினையும் சிங்கள மொழியில் தோதன்ன நிறுவனம் மொழிமாற்றம் செய்து வெளியிட்டுள்ளது. கிராமிய வழக்காறுகளையும் தொகுத்து எழுதியுள்ளார். இந்நூலினையும் எழுதியுள்ளார். அதிசயிக்கத் தக்க விசயங்களை இந்நூலில் தந்துள்ளார். இந்நூல் நல்ல படிப்பினையை வாசகர்களுக்குத் தருகிறது. இதில் நாமறிந்த, அறியாத பல கதைகள் உண்டு. நாமனைவரும் படிக்க வேண்டிய நல்லதொரு நூலாகும்.

கலாநிதி. கேணிப்பித்தன் ச.அருளானந்தம் அவர்கள் இதுவரை ஐம்பத்திரெண்டு நூல்களை எழுதியுள்ளார். பல பரிசுகளையும், விருதுகளையும் இலக்கியத்துக்காகப் பெற்றுள்ளார். அவர்களது நூல்களைத் தமிழ்கூறும் நல்லுலகம் வரவேற்று ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவரது இலக்கியப் பணி தொடர நாமெல்லோரும் சேர்ந்து வாழ்த்துவோம்.

ஓ.குலேந்திரன்
முன்னைநாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
58, மத்திய வீதி, உவர்மலை, திருகோணமலை



The author of this book is Dr.S.Arulanantham. He is a famous writer in Tamil and has written 52 books and many of them won national awards. He has written 05 volumes of short stories, 05 novels, and 01 book on Disaster management and 01 poetry book for adults. He also written 12 poetry books, 10 novels, 12 books on short stories, and biography of Swami Vipulananda. His writings are mostly for children. He was a teacher, principal and a SLEAS officer who served as Additional provincial Director of Education in the NEP Trincomalee and retired. His famous novel Vakkinile Inimai Vendum was translated into Sinhala language as Gamthra Wickramaya by Dammike Jayasinhe of Ruhunu University and published by Thothene publication. A children Short story Kannanum Ramanum too translated into sinhala and released by Thothanna organization.

He is one of the resource person who written the curriculum for Early Childhood Care and Education in English and he has translated into Tamil. The valuable resource guide is used in our country. He won national awards for 05 books and 08 Provincial awards for his literary work. Most of his works are based on unity and peaceful life among the communities.

O.Kulenthiran

சுசர வெளியீட்டகம்
இல.180/43 பீபல்ஸ்பார்க்
கொழும்பு-11
இலங்கை
தொ.பே.011 2430721/

TB046
Rs. 80.00

ISBN - 978-955-676-141 - 2
9 789556 761412

Cover Picture's By Internet

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org